# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

**அசல் வழக்கு எண் 136/2008**

பெயர்:**செங்கோட்டையன்** நாள்: 16.09.2025

பி.வா.சா.1 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – செங்கோட்டையன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11:15

நான் இவ்வழக்கில் 3-ம் பிரதிவாதி என்றால், சரிதான். இந்த வழக்கின் வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகள் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். இவ்வழக்கின் வாதி பவதாரணி பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும் மற்றும் நான் தாக்கல் செய்த 2 கிரயஆவணங்கள் செல்லாது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளின் குடும்பத்தை பற்றி எனக்கு தெரியுமா என்றால், தெரியும். தாவா சொத்து அவர்களுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரிந்து தான் நான் கிரயம் பெற்றேன் என்றால், சரிதான். தாவா சொத்தானது அம்மாசி என்பவரின் பரம்பரை சொத்து என்றால், சரிதான். அம்மாசிக்கு ராமன் என்கின்ற மகன் என்று சொன்னால், சரிதான். தற்போது ராமன் உயிருடன் இல்லை என்றால், சரிதான். ராமனுக்கு பழனியப்பன், ரங்கநாதன், இந்த வழக்கின் முதலாம் பிரதிவாதி பெருமாள் ஆகிய மூன்று மகன்கள் என்றால்,சரிதான். இவர்கள் மூவரும் அவர்களுடைய பரம்பரை சொத்தை 15.12.2003 ம் தேதி அன்று பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால், சரிதான். அந்த பாகப்பிரிவினை சொத்தில் சி பாக சொத்து முதலாம் பிரதிவாதி பெருமாளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். பெருமாளுக்கு ரேவதி மற்றும் பாக்கியம் என்ற இரண்டு மனைவிகள் என்றால், சரிதான். முதலாம் மனைவி ரேவதி தற்கொலை செய்துகொண்டார் என்றால், சரிதான். அவருடைய மகள்தான் இந்த வழக்கில் 2-ம் பிரதிவாதி மகேஸ்வரி என்றால், சரிதான். ரேவதி இறந்த பிறகு பாக்கியம் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்டார் என்றால், சரிதான். பாக்கியத்திற்கு பிறந்த மகள் தான் வாதி என்றால், சரிதான். பெருமாளின் நடவடிக்கை சரியில்லை என்பதால்தான் முதலாம் மனைவி ரேவதி தற்கொலை செய்துகொண்டார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. இரண்டாம் மனைவி மற்றும் இரண்டாம் மனைவியின்

மகள் இருவரையும் பெருமாள் பராமரிப்பதில்லை என்றால், சரியல்ல. வாதி பவதாரணியை அவருடைய பாட்டி பராமரித்து வருகிறார் என்றால், சரியல்ல அவர்கள் அனைவரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நிரூபிக்க இந்த நீதிமன்றத்தில் ஆவணங்கள் ஏதும் நான் தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. வாதி பவதாரணி அவருடைய பாட்டி பெருமாயியின் பராமரிப்பில்தான் இருந்தார் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் தாவா சொத்தை **பி.வா.சா.ஆ.2** மற்றும் **பி.வா.சா.ஆ.8** ன்படி கிரயம் பெற்றேன் என்றால், சரிதான். நான் கிரயம் பெற்றப்போது வாதி பவதாரணி மைனர் என்றால், சரிதான். வாதி பவதாரணி கிரயம் பெற்ற காலத்தில் அவருடைய தகப்பனாரின் பராமரிப்பில் இல்லை என்றாலும் கிரயம் செய்வதற்காக அவருடைய தகப்பனாரின் பராமரிப்பில் இருப்பதாக தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரியல்ல. முதல் மனைவியின் மகள் மகேஸ்வரி நான் வாங்கிய கிரயம் செல்லாது என்று இந்த நீதிமன்றத்தில் அ.வ.எண்.23/2007 என்ற வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். அந்த வழக்கின் பிராது, எதிர் வழக்குரை மற்றும் சமாதான குறிப்பறிக்கை ஆகியவற்றை **பி.வா.சா.ஆ.3 முதல் 5** ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது மகேஸ்வரிக்கு பேசி அதற்கான தொகை கொடுத்து பைசல் செய்துவிட்டேன் என்றால், சரிதான். எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால், ரூ.46,000/- கொடுத்தேன். இந்த வழக்கில் என்னுடைய எதிர்வாதம் என்ன என்றால், தாவா சொத்து முதலாம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்து என்றும், மைனர்களின் பராமரிப்பிற்காக சொத்தை விற்றார் என்றால், சரிதான். நான் சுயசம்பாத்திய சொத்து என்று கூறினாலும் தாவா சொத்தானது முதலாம் பிரதிவாதி மற்றும் வாதியின் பரம்பரை சொத்துதான் என்று சொன்னால், சரியல்ல. மைனர்களின் பராமரிப்பிற்காக சொத்தை முதலாம் பிரதிவாதி விற்றார் என்று சொன்னால், சரியல்ல. முதலாம் மனைவி ரேவதி இறந்த பிறகு மகேஸ்வரி அவருடைய பாட்டியின் வீட்டில் இருந்தார் என்றால், சரிதான். தற்போது மகேஸ்வரிக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால், சரிதான். பெருமாளின் நடவடிக்கை சரியில்லாத காரணத்தால் வாதி மற்றும் 2-ம் பிரதிவாதி மகேஸ்வரி தனியாக இருந்தார்கள் என்றால், சரியல்ல. வாதிக்கு பாகம் உள்ளது இருப்பினும் அவரை ஏமாற்றவேண்டும் என்ற நோக்கத்தில் தவறாக நான் எதிர்வாதம் செய்கிறேன் என்றால், சரியல்ல. 2-ம் பிரதிவாதி மகேஸ்வரிக்கு பங்கு இல்லை என்று நான் கூறிய

நிலையில் எதற்காக 2-ம்பிரதிவாதி மகேஸ்வரிக்கு ரூ.46,000/- கொடுத்தேன் என்றால், பிரச்சனை ஏதும் வேண்டாம் என்பதற்காக பணம் கொடுத்தேன். நான் கூறுவது தவறு என்றும் அவர்களுக்கு பங்கு இருப்பதால்தான் நான் ரூ.46,000/- கொடுத்தேன் என்றால், சரியல்ல. முதலாம் பிரதிவாதி பெருமாளின் தூண்டுதலின் பேரில்தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று நான் கூறுவது தவறு என்றால், சரியல்ல. தாவா சொத்தில் வாதிக்கு பாகம் பிரியாத சொத்துரிமை உள்ளது என்றும் நான் வாங்கிய கிரயம் செல்லாது என்று சொன்னால், சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் 1/3 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்கிறபடி தீர்ப்பாணை பிறப்பிக்கவேண்டும் என்றும் தாவாபடி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11:50

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.09.16 14:48:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.